பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 20 திங்கட்கிழமை (03-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 156

# ஜனாதிபதி பதவிக்கு விஜேதுங்கா
# ஆளுங்கட்சி ஏகமனதாக முடிவு

## தேர்தல் திகதி நாளை தெரியவரும்

கொழும்பு, மே 3

ஜனாதிபதி பதவிக்கு, பதில் ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவை வேட்பாளராக நிறுத்துவது என்று ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவும், செயற்குழுவும் நேற்றுக் கூட்டாகவும் ஏகமனதாகவும் முடிவு செய்தன

ஜனாதிபதி தெரிவை எப்போது நடத்துவது என்று நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது திகதி நிர்ணயிக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுப் பிற்பகலிலும், நாடாளுமன்ற கூட்டம் நேற்று மாலையிலும் நடைபெறுவதாக இருந்தன. ஆனால் கடைசி நேரத்தில் அந்த முடிவு மாற்றப்பட்டு இரண்டு கூட்டங்களும் ஒரே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தானே உருவாக்கிவிட்ட சூழ்நிலைக்கு பிரேமா பலி

### பி.பி.ஸிக்கு திலகர் பேட்டி

பாரிஸ், மே 3

பிரேமதாச தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு அவரே பலியாகிவிட்டார். விடுதலைப் புலிகளைக் குற்றஞ் சாட்டுவதில் அர்த்தமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் லோறன்ஸ் திலகர் பாரிஸில் இருந்து பீ.பி ஸிக்கு நேற்று அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறியதாவது;

பிரேமதாசாவின் கொலையில் தமக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என்று விடுதலைப் புலிகள் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

பிரேமதாசாவுக்கு ஏராளமான எதிரிகள் உண்டு. இதனை எவரும் மறுக்கமாட்டார்கள்.

பிரேமதாசா தானே உருவாக்கிய சூழ்நிலைக்கு அவரே பலியாகிவிட்டார் என்பதே உண்மையாகும்.

இது ஒரு தற்கொலை வெடிச்சம்பவமாக இருப்பது கூட ஆச்சரியம் அல்ல.

பிரேமதாசாவால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களில் எவராவது அவரைக் கொல்ல தனது உயிரைப்பணயம் வைக்க முன் வந்திருக்கலாம்.

தீவின் தென்பகுதியில் 60 ஆயிரத்துக்கு அதிகமான

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தீவிர பாதுகாப்பு; பெருமளவு துருப்புகள் குவிப்பு

### வடக்கு கிழக்கில் இருந்தும் படையினர் விரைவு

கொழும்பு, மே3

தலைநகர் கொழும்பு உட்பட தென்பகுதி முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார் படுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேமாவுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் கொழும்பில் குவிந்த வண்ணம் இருப்பதாலும், எதிர்வரும் வியாழக்கிழமை இறுதி ஊர்வலம் நடைபெறஇருப்பதாலும்பாதுகாப்புக்காக இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத்தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மே, 3

தென் இலங்கையில் உள்ள ஏழு மாகாண சபைகளின் தேர்தல்கள் திட்டமிட்டபடி இம்மாதம் 17 ஆம் திகதி நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா முன்கண்ட தகவலை நேற்று வெளியிட்டார்.

இதற்கு முன் பதில் ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவும் மாகாண சபைத் தேர்தல்கள் திட்டமிட்டபடி நடக்கும் என்று தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டார நாயக்கா பதில் ஜனாதிபதியைச் சந்தித்த போது இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது. (இ-எ)

## அடையாளம் தெரியாதவாறு பிரேமாவின் உடல் சிதறியது

### கைக்கடிகாரம், மோதிரம் மூலமே கண்டுபிடிப்பு

கொழும்பு, மே. 3

தற்கொலையாளியின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஜனாதிபதி பிரேமதாசா உடல் சிதறி கருகிப் பலியானதாக நேற்று ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது

அவரது உடலை அவர் அணிந்திருந்த கைக்கடிகாரம் மற்றும் மோதிரம் ஆகியவற்றின்மூலமே அடையாளம் காண முடிந்தது என்றும் ரொய்ட்டர் அறிக்கையை மேற்கோள் காட்டி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## பதில் ஜனாதிபதியுடன் சிறிமாவோ சந்திப்பு

கொழும்பு, மே 3

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா நேற்றுக் காலை பதில் ஜனாதிபதி டி பி. விஜயதுங்காவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

மாகாணசபைத் தேர்தலை பின்போடக் கூடாது என்றும் —

இந்த தேர்தல் முடியும் வரை அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் பூரண பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் திருமதி பண்டார நாயக்கா அப்போது கேட்டுக்கொண்டார்.

தேர்தல் கூட்டங்களுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (இ-எ)

## மூடிய பெட்டியில் பிரேமாவின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு

கொழும்பு, மே 3

பிரேமதாசாவின் பூதவுடல் நேற்று அவரது சொந்த வாசஸ்தலமான ''சுசரித்த மந்திரய'' வில் மூடிய நிலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பிரேதப் பெட்டி தேசியக் கொடியினால் மூடப்பட்டிருந்தது. பெட்டிக்கு முன்னால் பிரேமாவின் பெரிய வண்ணப் படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

பூதவுடலுக்கு அமைச்சர்கள், எம். பிக்கள், அரசியல் பிரமுகர்கள், மதகுருமார்கள் அரச உயரதிகாரிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர்கள் அசோகா வடிகமங்காவ, விமல் விக்கிரமசிங்க, செல்லச்சாமி ஆகியோர் அழுதபடி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் அமைச்சர்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மாளிகையில் இன்று பூதவுடல் அஞ்சலிக்கு

படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் பூதவுடல் இன்று (திங்கள்) ஜனாதிபதி மாளிகைக்கு எடுத்துச் செல்லப்படும்.

கொலையுண்ட தினமான நேற்று முன்தினம் நள்ளிரவு அளவில் அவரது பூதவுடல் ஆஸ்பத்திரியில் இருந்து ''சுசரித்தமந்திரய''வுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இது அவரது சொந்த வாசஸ்தலமாகும். (ஒ-எ)

## தற்கொலைப்படை நபர் 14 வயதுச் சிறுவனாம்

ஜனாதிபதி பிரேமதாசா மீது குண்டுத் தாக்குதலை நடத்திய தற்கொலைப்படை நபர் 14 வயதான சிறுவன் என்று ரொய்ட்டர் செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்கொலையாளியின் சடலத்தின் சிதறிய உறுப்புக்களில் இருந்து சயனைற் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன என்றும் விசாரணைகள் தொடர்கின்றன என்றும் குற்றப்புலனாய்வுக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரி லயனல் குணதிலக்க செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஜனாதிபதி தெரிவு குறித்து செயலகம் அறிவிப்பு

நாடாளுமன்றம் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அதன் உறுப்பினர்களில் மிகப் பொருத்தமான ஒருவரை ஜனாதிபதி பதவியை வகிக்க தேர்ந்தெடுக்கும்.

ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றின் படி —

அரசியல் யாப்பு விதிகளுக்கு அமைய இவ்வாறு நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுபவர் தற்போதைய ஜனாதிபதி பதவிக் காலம் 1994 ஆம் ஆண்டு முடியும் வரை ஜனாதிபதி பதவியை வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பூரணமான — விளக்கமான — செய்தி ஒன்று நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

## திருமலையில் ராணுவ முகாம் புலிகளால் தாக்கி அழிப்பு!

### 5 ராணுவம் பலி; 12 காவலரண்கள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், மே 3

திருகோணமலையில் உள்ள இராணுவ முகாம் ஒன்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் தகர்க்கப்பட்டது.

தொப்பூரக்கும் மாசாறிவேவக்கும் இடையில் பம்புறுக்க வெவ என்னும் இடத்தில் அமைந்திருந்த இராணுவ முகாமே தாக்கி அழிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் சனி அதிகாலை 2.30 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தகர்க்கப்பட்ட முகாமில் ஏறக்குறைய 50 இராணுவத்தினர் தங்கியிருந்தனர் விடுதலைப் புலிகள் அந்த முகாம்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவுகள்



அமரர்

### நமசிவாயம் குமாரசாமி K.K.S.

(K. C. W. முன்னாள் உத்தியோகத்தர்)

தோற்றம்: 1913 - 08 - 24
மறைவு: 1993 - 04 - 03

என்றும் எம் நன்றிச்குரிய இனிய தந்தையே நின் ஆத்மா சாந்தி பெறுவதாக!

— மனைவி மக்கள், மருகர், பேரர்.

கொக்குவில் மேற்கு. (25506)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அ. கமலாதேவி (B. A.)

(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

தோற்றம்: 03 — 01 — 1948
மறைவு: 15 — 04 — 1981

திதி: 03 — 05 — 1993

எங்கள் குடும்பத்தின் ஞானவிளக்காக, அன்பூற்றாக விளங்கி அபிவிருத்தி உத்தியோகஸ்தராக, சமூக பொருளாதார மாதர் குல முன்னேற்றத்திற்கும் அரும் பணியாற்றிய திருமதி கமலாதேவி (B. A.) நாம் கதறிக் கலங்கும்படி சடுதியில் சிவகதி அடைந்து ஆண்டு பன்னிரெண்டைக் கடந்துள்ளது. வேதனையில் உழலும் எங்களிதயங்களில் அன்னாரின் தரிசனம் கணம் தோறும் கிடைத்துத் தினம் நாம் செலுத்தி வரும் கண்ணீரஞ்சலியை நினைவு கூர்ந்து கண்ணீரோடு சிரம் தாழ்த்துகிறோம்.

உங்கள் நினைவால் வாடும்:
தாயார், சகோதரன், மைத்துனி, மருமகன், மருமகள், சகோதரர்கள், சகோதரிகள், சிறிய தந்தையர்கள், சிறியதாய்மார்கள், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், உறவினர்கள்.

"அக்கா அகம்"
இணுவில். (25501)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 3

"உதயன்" ஆதரவில் யாழ். மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3-00 மணி ஜொனியன்ஸ் கறுப்பு அணி எதிர் சென். பத்றிக்ஸ் கல்லூரி அணி.

★ மாலை 4-00 மணி:- ஷப்றா அணி எதிர் பத்றிஷியன் பச்சை அணி.

o o o

யாழ். மாவட்டபாடசாலைகளிடையே யாழ். கல்வித் திணைக்களம் நடத்திவரும் மாவட்ட நிலை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 17 வயதுப் பிரிவு:- வயாவிளான் ம. ம. வி. எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி.

19 வயதுப் பிரிவு:- ஹாட்லிக் கல்லூரி எதிர் சாவகச்சேரி டிறிபேர்க்.

o o o

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஈக்கிள் ஸ்ரார் வி.க. அணியை எதிர்த்து கோல்டன் ஈக்கிள் வி. க. அணி மோதும்.

கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பாரதி "பி" அணியை எதிர்த்து ஐங்கரன் அணி மோதும்.

## ஆலயங்களில்

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலை வளவில் கோயில்கொண்டிருக்கும் அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கள் நடைபெறும். (த-100)

o o o

உடுப்பிட்டி வல்லை வாளி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று திங்கள் இரவு 7 மணிக்கு 'இந்து சமயம்' என்னும் பொருளில் திரு. அரிய-சிவலிங்கம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

o o o

கோப்பாய் ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவிலில் இன்று திங்கள் பகல் சங்காபிஷேகமும் மாலை 5-30 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறும். (த)

o o o

யாழ்ப்பாணம், மே 3

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் மணவாளக் கோலத்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும்.

பின் அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (அ-30)

## இன்று

மெய்கண்ட தேவர் ஆதீனத்தினர் ஏற்பாடு செய்துள்ள சந்தானகுரவர் உமாபதி சிவாசாரியர் திருநாள் இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு யாழ். உலைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் நடைபெறும். மூதறிஞர் க. சி. குலரத்தினம் சிறப்புரை நிகழ்த்துவார். (த)

## 'சத்திய வேள்வி' இசை நாடகம்

யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் இன்று மாலை 6-45 மணிக்கு "சத்திய வேள்வி" இசைநாடகம் இறுதிக் காட்சி நடைபெறும். திருமதி வி. வி. வைரமுத்து மங்கள விளக்கேற்றி இன்றைய நிகழ்ச்சியைத் தொடக்கி வைப்பார்.

### கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்—

வடக்கு - கிழக்கு போர் முனைகளில் இருந்தும் கூட சுமார் ஆயிரம் படையினர் வரையில் கொழும்புக்கு விரைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெற்கின் ஏனைய பகுதிகளுக்கும் மேலதிகமாகத் துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

## இறுதிச்சடங்கில் காலிதா ஸியா

பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகளில் பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா கலந்து கொள்வார்.

## ஓராண்டு நினைவஞ்சலி

பூவுலகில்: 23 — 01 — 1927
விண்ணுலகில்: 13 — 05 — 1992



### அமரர் வினாசித்தம்பி மாணிக்கம்

(அளவெட்டி)

திதி: 03 — 05 — 1993

ஓராண்டு முடிந்ததையா - இல்லமே
இருண்டதையா – ஆனால்
எம் இதயம் இருக்கும்வரை - உங்கள்
நினைவு மறையாதையா.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

கும்பப்பிள்ளை,
கோப்பாய் தெற்கு,
இருபாலை. (25495)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் V.S. கணபதிப்பிள்ளை

(சிவம்)

தோற்றம்: 08 — 08 — 1925
மறைவு: 04 — 04 — 1993

அச்சுவேலி தெற்கு V S. கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04-05-93) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கன், மைத்துனர், பேரப்பிள்ளைகள்

பயித்தோலை,
அச்சுவேலி. (25503)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் கிழக்கு ] ஆசிமட அரசடி விநாயகர் தேவஸ்தான

# ★ மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் ★

(03 - 05 - 1993)

## இன்னல்தீர்த்து நல்லருள் பாலிக்கும் பரம்பொருள் பஞ்சமுக விநாயகர்

பிரணவப் பொருளின் திருவடிவமே விநாயகப் பெருமான். பிரணவத்தில் அனைத்து மந்திரங்களும் உள்ளடக்கம். அதுபோன்று விநாயகரின் திருவுருவத்தில் எல்லாத் தெய்வங்களின் அம்சமும் அனைத்து உலகங்களும் அடங்கும்.


பிரணவமாகிய ஓங்காரப் பொருளை உணர்த்தி நிற்கும் விநாயகப் பெருமானின் திருவதனத்தில் உள்ள முக்கண்ணும் அவர் மாலையும் சிவபெருமானைக் குறிப்பன, அவர் தாங்கும் பாசம் படைத்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் தத்துவ விளக்கமாகக் கொண்டுள்ளன

ஐந்தொழில்களையும் புரியுந் தன்மையினால் இவரிடத்து சிவ அம்சம் பொலிந்து விளங்குகின்றது. சிவனே இவரது வடிவத்தில் அடங்கியிருக்கின்றார் என்பது நம்பிக்கை.

இத்தகைய தெய்வீக மகிமை கொண்ட விநாயகப் பெருமானுக்குரிய ஆலயங்கள் பொலிந்து விளங்கும் யாழ்ப்பாணம் ஒரு புண்ணிய பூமியாகும். ஊர்தோறும் சிறப்புற்று விளங்கும் விநாயகப் பெருமானின் ஆலயங்களினால் எம்மக்களின் சமய வாழ்க்கை மேன்மையடைகின்றது. அதன்வழி பண்பாடு சிறப்படைகின்றது. அத்தகைய சிறப்புமிகு ஆலயங்களில் ஒன்றாக விளங்குவது கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயமாகும்.

ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பெற்ற இவ்வாலயம் பல புதுமைகளைக் கொண்டது. இவ்வாலயத்தில் உள்ள விநாயகர் விக்கிரகம் வயல் நிலத்திலிருந்து உதித்தெழுந்த ஐதிகமுடையது உழுத வயலில் உதித்தெழுந்து கோயில் கொண்ட விநாயகர் என்ற பெருமை ஏற்படலாயிற்று ஆலயத்தின் அருகே அரச மரமும் நாட்டப்பெற்றது. இவ் விநாயகப் பெருமானை

(4 ஆம் பக்கம் பார்க்க)



கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்,
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

## நல்லை ஆதீனமுதல்வர் ஆசி

சைவ செம்மனச் செல்வர்களே!

கோண்டாவில், ஆசிமட அரசடி ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கு பஞ்சமுக எழுந்தருளி விக்கிரகம், பஞ்சலோகத்தினால் அமைத்து விஷேட அபிஷேகமும் நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்சியடைகிறோம். பிரணவ சொரூபியாம் அப் பெருமானுக்கே பூஜைகளிலும் மற்றும் எல்லாச் சடங்குகளிலும் முதல் இடம். பஞ்சாட்சரத்துக்கு ஒப்ப சிவபெருமானுக்கே ஐந்து திருமுகங்கள் எனினும் விநாயகப்பெருமானையும் சிவனே எனக் கொண்டு வழிபடுகிறோம். அவரிலும் மேலான நாயகன் இல்லாததினால் விநாயகர் ஆனார்

இப் பெருமான் எமது பிழைகளை எல்லாம் பொறுத்துக் கேட்கும் வரம் அருளும் கருணாமூர்த்தி மிக எளிய முறையில் ஆராதிக்கப்படுபவர். அவரைக் குறிக்க ஒரு சோமய உருண்டை, மஞ்சள் உருண்டை போதும். பாரத மகா காவியத்தை மேரு மலையில் எழுதிய மூலவர். ஔவைப் பிராட்டிக்கு பிரத்தியட்சமகாகத் தோன்றி அருள்பாலித்த அண்ணல்.

நாம் அவரை ஒருமையுடனும், திரிகரண சுத்தியுடனும் வழிபட்டு வேண்டுவனவெல்லாம் பெறலாம், இது அனுபவ ரீதியாக உணரவேண்டியது. இவ்வரிய கைங்கரியத்துக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, பலவகையாலும் தொண்டுகள் புரிந்த அன்பர்களையும், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை அன்பர்களையும், பாராட்டி எல்லோருக்கும் எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

— ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்

## சிவத்தமிழ் செல்வி வாழ்த்து

கோண்டாவில் ஆசிமட அரசடி ஆலயம் பழமையும், அற்புதமும் வாய்ந்த திருக்கோயிலாகும். இந்த பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் ஒன்றை உற்சவமூர்த்தியாக எழுந்தருளச் செய்யும் புண்ணியச் செயல் மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

ஐந்து முகத்தோடு அமைந்த சிவமூர்த்தம் என்பது தத்துவார்த்தமான(பொருளைத் தருவது. அதுவே விநாயகப் பெருமானின் பஞ்ச முகங்களையும் விளக்கி நிற்பது எங்கும் நிறைந்து கருணை மழை பொழியும் அற்புதத்தை இது காட்டுகிறது எனவே விழாக்காலங்களில் உலா வரும் உற்சவ மூர்த்தியானது தன்னை நோக்கி எத்திசையில் நின்று தொழுபவர்களுக்கும் காட்சி கொடுக்கும் அருள்நிலையை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இதனைத் திருப்தி செய்யவேண்டிய முறையில் பஞ்சமுகப் பிள்ளையார் திருவுருவம் அமைந்துள்ளது.

குடமுழுக்கு நிகழ்ச்சியினால் இவ்வுருவம் தெய்வீக உருவமாக மாறி அடியார்களுக்கு அருள் பொழிய உள்ளது.

எனவே இத்தகைய திருப்பணிகளில் ஈடுபடுவோர் அனைவரும் சிவபுண்ணிய சீலர்களே என்பது வெளிப்படை இவர்களை வாழ்த்துவதும் மேலும் மேலும் விநாயகப் பெருமானின் அருட் பிரவாகம் ஓங்கப் பிரார்த்திப்பதும் எமது கடனாகும்

- தங்கம்மா அப்பாக்குட்டி.

## ஆத்ம தாகத்தை தீர்க்கும் பஞ்சமுக விநாயகர் தரிசனம்

ஞான முதல்வனான விநாயகரை பிரணவ வடிவிலே கண்டு வழிபடுவது நமது வழக்கம். அப்பிரணவம் உலகம் ஒடுங்கும் வரை அதிர்ந்து கொண்டிருக்கும் உள்ளொலியாக, நாத தத்துவத்தின் அடிப்படையாக விளங்குகிறது. அதனையே ''ஓவாத சத்தத்து ஒலியே போற்றி'' என திருமுறைகள் போற்றுகின்றன

உலகத்திற்கு மூலமாய்த் தோன்றிய ஓங்காரம் திருமுகமாகவும் உலகங்களின் தொகுப்பாய் அமையும் இடம் பெருவயிறாகவும், உலகத்தை தாங்கும் ஆற்றல் காலாகவும் அமையப்பெற்ற திருமேனியே மாலை 6-30 மணி முதல் பல சைவப் பெரியார்கள் சமயச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்கள்.

சைவசமயச் சொற்பொழிவு நிகழ்த்த வந்த பெரியார் ஒருவர், ஆலயத்தை வலம் வந்து வணங்கிவிட்டு, எல்லாம் சிறப்பாக அமைந்திருக்கும் இவ் ஆலயத்தில் பஞ்சமுகப் பிள்ளையாரைக் காணவில்லையே என தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார்.

### உள்ளத்தில் பதிந்த குறைபாடு

தனைச் செவிமடுத்த அடியார் ஒருவரின் உள்ளத்தில் இக் குறைபாடு ஆழமாகப் பதிந்துவிட்டது. உடனே

**ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை**

பிள்ளையார் திருவுருவாகும்.

கோண்டாவில் கிராமத்தின் மத்தியில் கம்பீரமாக அழகுற காட்சியளிக்கும் ஆலயம் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் இந்த ஆலயத்தில் குடிகொண்டு இருக்கும் விநாயகப் பெருமானின் அருளாட்சி அற்புதமானது. இந்த ஆலயத்தின் உற்சவங்கள் யாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் வைகாசி மாதம் எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செயலில் இறங்கிய அந்த அடியார் கோண்டாவில் எல்லையில் (தாவடி) வாழ்ந்துவரும் ஸ்தபதி நா. சோமசுந்தரம் அவர்களிடம் சென்று ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திற்கு பஞ்சமுக விநாயகரை உருவாக்கித் தரும்படி வேண்டினார். அவ் வண்ணமே ஸ்தபதியரும் பஞ்சமுக விநாயகரை கலை வண்ணம் மிளிர, அழகான தோற்றத்துடன் தத்துவ விளக்கங்களுடன் பஞ்ச உலோகங்களினால் உருவாக்கியுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் வாழ்த்துகிறார்

விநாயகப் பெருமானை வழிபட்டு உய்வதற்கு எழுந்த ஆலயங்களில் ஒன்றாகச் சிறந்து விளங்கும் கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் அடியார்களின் பக்தி உணர்வின் வெளிப்பாடாக பஞ்சமுக விநாயக மூர்த்தம் ஒன்று உருவாகி கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். இத்திரு மூர்த்தத்தினால் விநாயகப் பெருமானின் திருவருள் இவ்வாலயத்தில் சிறந்து விளங்கி எமக்கு நல்வழி காட்டி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தெய்வீகக் கைங்கரியத்தில் ஈடுபட்ட விநாயகர் அடியார்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் கிட்டுவதாகுக. எம் மக்களது இன்னல்களும், துயர்களும் நீங்கி, அன்பு அமைதி நிலைபெற இக்கும்பாபிஷேகத்தின் பயனாய் பொலியும் தெய்வீக சக்தி என்றென்றும் துணை நிற்கும் வண்ணம் எம்பெருமானின் திருவடிகளைப் போற்றித் துதிப்போமாக

- கா. மாணிக்கவாசகர்-

## கம்பன் கழக அமைப்பாளர்

எவ்வித குறையுமின்றி நித்திய, நைமித்திய கிரியைகள் நடந்துவரும் கோண்டாவில் ஆசிமடத்தடி விநாயகர் தேவஸ்தானத்தில் வாழ்வு மிகுத்து வர அருள் செய்யும் வேளமுகத்தான் வினை தீர்த்து அடியவரைக் காத்து நிற்க அவ்ஐயனை ஐந்து முகத்தனாய் அழகுறக் காணும் விருப்பினால் பஞ்சமுக விநாயக விக்கிரகம் உருவாகி நிறைவு பெற்றுள்ளது

நம் இனமே ஐஞ்சு முகப்பட்டு நிற்கும் இவ்வேளையில் ஐந்து முகமாய் நம் ஆனைமுகத்தான் அபயமளிப்பான் என நம்புவோம்.

- இ. ஜெயராஜ்.


**தயாளன்**
விவசாய மாளிகை
விவசாய இரசாயனப் பொருள்கள், விதை வகைகள் என்பன விற்கும் இடம்
பலாலி வீதி, கோண்டாவில்

**ஏ. ஆர். எஸ்.**
களஞ்சியம்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

**சோதி**
வர்த்தக நிலையம்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**ஷர்மிளா**
பார்மசி அன்ட் குறோசறீஸ்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**திருநாவுக்கரசு**
அன் சன்ஸ்
என். எஸ். ரி
பலாலி றோட்,
கோண்டாவில்.

**சிவா பிரதர்ஸ்**
பலசரக்கு, கட்டடப் பொருள்களும், பெயின்ட் வகைகளும் விற்கப்படும்.
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**தவம்**
களஞ்சியம்
பலசரக்கு மொத்த வியாபாரம்
பலாலி றோட்,
கோண்டாவில்.

**HARY'S**
INSTITUTES
Kondavil East,
Kondavil.
SPOKEN ENGLISH
with
GRAMMAR
by
M. A. HARI
(B. A. Dip - in - Eng.)

**மகேந்திரன்**
வர்த்தக நிலையம்
பொற்பதி றோட்,
கோண்டாவில்.

**இராசமணி**
ஸ்ரோர்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

விளம்பர இலக்கம்: (25448)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25494)

வெள்ளை பொமனேரியன் நாய் (பெண்) விற்பனைக்கு உண்டு. ம. லோகராஜா, பாடசாலை வீதி, ஆறுகால் மடம். (25490)

### பப்படம்

ஆனந்தம் அம்மாமி, உங்கள் மங்கள வைபவத்தை மெருகூட்டுவதற்கு நற்சுவை உணவு படைக்க 100 வீத சுத்தமான விசேட தயாரிப்பு எங்கும் இடைக்கும். தயாரிப்பாளர்:- ஸ்ரீசச்சிதான என்ரர் பிறைசஸ், ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி. (25456)

### தேவை

ஆலய பாவனைக்காக (.5K. VA.—1.5K VA) மண்ணெண்ணெய்யில் இயங்கக்கூடிய ஜெனரேட்டர் தேவை. தொடர்பு: மெதடிஸ்த திருச்சபை, CLS புத்தகசாலை, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4968)

### தவறிவிட்டது

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த சிற்றம்பலம் சிவநாதனின் 712741678V இலக்க அடையாள அட்டை யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் P. சந்திரன், பவானி விலாஸ், 32/1, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (25498)

### O/L MATHS

G.C.E. O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் இருபத்தாறு வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் நாற்பது மணித்தியாலங்களில் (Distinction) பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (25493)

### யந்திரம்

விவாகத் தடைக்குரிய யந்திரங்களும், வியாபார, வசிய யந்திரங்களும் மாந்திரிக பீடை விலக யந்திரங்களும் பெறலாம் சாதகத்துடன் வரவும். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை சோதிட நிலையம், இல 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25487)

### குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியல்கள் சுத்தமானவை. சுவையானவை. பருகிக் களிப்படைவீர். தயாரிப்பும், விநியோகமும் Siva Industries 35/3, Colombogam Road, Chundikuli. (சி-5061)

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர கல்வி, விவாக, தொழில் தடைகள் நீங்க சாந்தி பரிகாரங்கள் கூறப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25486)

---

அறிவுக்களஞ்சியம்

11ஆவது இதழ் வெளிவந்து விட்டது

(சி 4977)

---

SPOKEN ENGLISH
With
GRAMMAR
M. A. ஹரி

திங்கள், புதன் 2 - 15

ஆரம்பம்: 03 - 05 - 1993

BOND
யாழ்ப்பாணம்.

(சி-5076)

---

## உடுவில் மகளிர் கல்லூரி

# பட்டப் படிப்புகள் பிரிவு

## G. A. Q. - 94

★ யாழ்ப்பாண, பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கான G. A. Q. வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
★ அனுமதியைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் சமுகமளிக்கவும்.
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆரம்பம்: 03 - 05 - 1993
மாலை 3-00 மணி

- நிர்வாகி.

(சி 5081)

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## பொன்னையா மனோன்மணி

மலர்வு: 30 — 12 — 1913
மறைவு: 28 — 04 — 1988
திதி: 03 — 05 — 1993

எங்கள் அருமைத் தாயே! நீங்கள் மறைந்து 5 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு தினமும் பொங்கி எழுந்து உங்கள் ஆத்மா சாந்திக்காக தினமும் இறைவனை பிரார்த்தித்து கண்ணீர் அஞ்சலி செலுத்தும்.

கணவன், மகள்மார்,
மகன் (பொ. க. மூர்த்தி),
மருமகன்மார்,
மருமகள் (நந்தினி),
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மு. பொ. பொன்னையா,
கணேச வாசா,
சங்கானை.

(25483)

---

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

# வெற்றிடம்

## விடுதி மேற்பார்வையாளர்

எமது நிறைவாழ்வு இல்லச் சிறார்களுடைய நலன்களைக் கவனிக்கவும், அவர்களுக்கு வழிகாட்டவும், அன்பு செலுத்தவும், சேவை மனப்பான்மையும் அர்ப்பணிப்புணர்வும் கொண்ட விடுதி பெண் மேற்பார்வையாளர் ஒருவரும், உதவி விடுதி மேற்பார்வையாளர் இருவரும் (ஆண்-1, பெண்-1) தேவை.

வேட்பாளர் 40வயக்கு மேற்பட்டவராயும், க.பொ.த. (உ.த) சித்தியடைந்தவராயும், நல்லொழுக்கம் உடையவராயும், குடும்பத் தொந்தரவுகள் அற்றவராயும், தேகாரோக்கியம் உடையவராயும், நிறைவாழ்வு இல்லத்திலேயே தங்கியிருந்து பணியாற்றக் கூடியவராயும் இருக்க வேண்டும்.

ஊதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 10 05-1993க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

சோ. பத்மநாதன்,
செயலாளர்,
சைவவித்தியாவிருத்திச் சங்கம்.

(சி-5071)

---

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக ஸ்தாபக உறுப்பினரும், இயக்குநர் சபை அங்கத்தவருமான

லயன் டாக்டர்
## இ. பாக்கியநாதன்

அவர்கள் 02 - 05 - 1993 ஞாயிற்றுக்கிழமை காலை திடீர் மரணம் எய்தியமை எமது கழகத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அவரை இழந்து கவலையுறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

(25496) -நல்லூர் லயன்ஸ் கழகம்

---

# இன்னல் தீர்த்து...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரித்து வந்தவர்கள் அந்தக் கோயிலுக்குச் சொந்தமான ஆசிமடத்துப் பெண்கள் என அழைக்கப்பட்ட இரு சகோதரிகள் ஆவர். எனவே ஆசிமட அரசடி விநாயகர் என்ற திருநாமம் ஏற்படலாயிற்று.

### பஞ்சமுகத்தின் சிறப்பு

விநாயகரின் பஞ்சமுக மூர்த்தம் சிறப்பு வாய்ந்தது. முழுமுதற் தெய்வமாகிய விநாயகரிடத்தில் ஈஸ்வர அம்சம் சிறக்கக் காணலாம். சிவபெருமானிடத்து காணப்படும் பிறைச் சந்திரனும் அவர்தம் மூக் கண்ணும் இவரிடத்துக் காணப்படுவது முக்கியமானதாகும். சிவனுடைய மைந்தனாக விநாயகர் போற்றப்படினும் அவருக்கும் விநாயகருக்கும் வேற்றுமையென்பது சிறிதும் இல்லை என்பதும் எம் சமயத்தவரின் நம்பிக்கையும் கோட்பாடுமாகும். சிவபெருமானே விநாயகக் கடவுளாக எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள், பத்துத் திருக்கரங்கள், பதினைந்து திருக்கண்கள். ஐமுகக் கடவுள் சிறப்பாகச் சிவனையும் ஐங்கரக் கடவுள் என்பது விநாயகரையும் குறிக்கும். ஆனால் விநாயகர் ஐந்து திருமுகங் கொண்டருளும்போது பஞ்சமுக விநாயகர் எனச் சிறப்பிக்கப்படுகின்றார். பஞ்சமுக விநாயகருக்குப் பத்துத் திருக்கரங்களோடு ஐந்து துதிக்கைகளும் சேர்ந்து பதினைந்து திருக்கரங்களும், பதினைந்து திருக்கண்களும் உண்டு. அபய வரத கரங்களோடு பாசம் அங்குசம் முதலியனவற்றோடும் மும்மூர்த்திகளின் ஆயுதங்களையும் தரித்திருக்கின்றார்.

ஐந்தொழில்களைச் செய்பவராகவும் ஐம்பொறிகளை அடக்கி ஐந்தெழுத்தை ஓதி உணரும் அன்பர்களுக்கு அருருபாலிக்கின்றவராயும் பரம்பொருள் தாமே என்பதைக்குறிப்பதாகவும் பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் அமைந்து விளங்குகின்றது.

விநாயகப் பெருமானின் பஞ்சமுகமூர்த்தி வழிபாடு யாழ்ப்பாணத்தில் உள்ள விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்றுவரும் மரபுக்கேற்ப, கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திலும் பஞ்ச உலோகத்தில் கலையெழிலுடன் கூடிய பஞ்சமுக விநாயகர் திருவுருவம் உருவாகி கும்பாபிஷேகம் நிகழ்வது எமது தவப்பயனாக அமைவதோடு கண்கொள்ளாத தெய்விகக் காட்சியாகவும் அமைகின்றது. ★

# ஆத்ம தாகத்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சமுகப் பிள்ளையாரின் கும்பாபிஷேகம் இன்று (03 - 05 - 1993) திங்கட்கிழமை காலையில் நடைபெறுகின்றது. இன்று நாம் பஞ்சமுக விநாயகரின் அற்புதத் தோற்றத்தைக் காணும் வாய்ப்பினைப் பெற்றுள்ளோம். பஞ்சமுக விநாயகரின் தரிசனம், ஒலிக்கின்ற திருமந்திரங்கள், நைமித்தியக் கிரிகைகள், பெரியோர்களின் அருள் மொழிகள் அனைத்தும் ஆலயத்தை மையமாக வைத்து நிகழும்போது, பக்திப்பரவசம் ஊட்டுவதுடன் எமது ஆத்ம தாகம் நிறைவெய்துகிறது.

பஞ்சமுக விநாயகரின் அருள் நிழலில் அனைவரும் அமைதியும், ஆனந்தமும் அடைய வேண்டும். எம் பெருமானின் அருளினைப் பூரணமாகப் பெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பிரேமதாசாவின் இரு பக்கங்கள்

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாசா கொலை செய்யப்பட்டு விட்டார். ஆளுங்கட்சியின் பேரணிக்குத் தலைமை வகித்துச் சென்ற வேளை, தற்கொலையாளி ஒருவரின் குண்டுக்கு அவர் இரையானார்.

பிரேமதாசாவின் கொலைச் சம்பவத்தின் பின்னால் உள்ள சூத்திரதாரிகள் யார், பின்னணி எவை என்பது குறித்து இப்போது எதுவும் உடனடியாகத் தெரிய வரும் என்று எதிர்பார்க்க இயலாது.

ஆனால் பிரேமதாசாவின் கொலைக்குப் பின்னால் பல பின்னணிகள் சூழ்ந்துள்ளன, பிரேமதாசாவின் அரசியல் எதிரியான, ஒரு காலத்தில் ஜனாதிபதியாக வரக்கூடியவர் என்று கணிக்கப்பட்ட லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னர் தெற்கில் உண்டான அரசியல் குழப்ப நிலையில் பிரேமதாசாவின் கொலை நடந்திருக்கிறது.

இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்தி, கலங்கிய குட்டையில் காரியம் சாதிக்கும் நோக்கோடு, குழப்பத்தோடு குழப்பமாக, ஒருவரைச் சாட்டி மற்றவர் என்ற நிலையில் ஏதோ ஒரு சக்தி மறைந்திருந்து இந்தக் கொலையைச் செய்திருக்கிறது.

எதிர்க் கட்சிகள், பிரேமாவின் சொந்தக் கட்சிக்காரர் (அவரது தலைமைத்துவத்தில் அதிருப்தி கொண்டவர்கள்), தெற்கின் வசதி படைத்த உயர் கூட்டத்தினர் (Elites), பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிருப்திப் பிரிவினர், கண்ணுக்குப் புலப்படாத வெளியார் சக்தி என்று பல மூகமூடி தரித்த சக்திகள் தனித்தோ, கூட்டுச் சேர்ந்தோ இந்தக் கொலையின் சூத்திரதாரிகளாக இருந்திருக்கக் கூடும் என்று கருத இடமுண்டு.

எப்படியோ, இதற்கான அடித்தளத்தைப் போட்டவர், அல்லது விதையை விதைத்தவர் பிரேமதாசாவே அன்றி எவருமிலர். பிரேமதாசா தமக்கு எதிரானவர்களை, தமக்குப் போட்டியாக வரக்கூடியவர்கள் என்று எண்ணுபவர்களை தலையெடுக்க விடாமல் அடக்கி வைப்பதிலும், ஒதுக்கி வைத்து ஓரங்கட்டி விடுவதிலும் வல்லவர். அதற்கான தந்திரமும், செயல்திறனும் அவரிடம் நிறைந்து காணப்பட்டன. (தாம் ஓரங்கட்ட நினைப்பவர்களை இவர் ஒழித்துக் கட்டுவதிலும் கைதேர்ந்தவர் என்ற குற்றச் சாட்டும் உண்டு)

எதிர்க்கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் செல்வாக்குப் பெறாது தடுப்பதில் வெளிக் காட்டியும், மறைமுகமாகவும் பல காரியங்களை பிரேமா ஆற்றி வந்தார். தானே மீண்டும் பதவிக்கு வரவேண்டும் என்ற ஆசையில், தனது சொந்தக் கட்சியிலும் தனக்கு அடுத்த வாரிசு அல்லது தளபதி என்று சொல்லவல்ல பலமான எவரையும் தனக்கு அருகில் வைத்திருக்கவில்லை.

இனப்பிரச்சினை மற்றும் முக்கிய அரசியல் பிரச்சினைகளில் எவரது ஆலோசனைக்கும் செவிசாய்க்காது தனது சொந்தத்தில் முடிவுகளைச் செய்து வந்தார். தாம் சொல்வதையே மற்றவர்கள் செய்ய வேண்டும் என்ற போக்கினால் பாதுகாப்புத் துறையிலும் இவர் பல எதிரிகளைத் தேடிக் கொண்டார்.

இலங்கையில் ஓர் அரசியல் வெற்று நிலையை உருவாக்கி அதனை வைத்து சுயநலம் தேட நினைக்கும் வேறு வெளியார் சக்திகளும் குட்டைக்குள் இறங்கி இருக்கலாம்.

இத்தகைய பின்புலங்களோடு பிரேமதாசாவின் கொலையை சேர்த்துப் பார்க்கக் கூடிய ஊகங்களும், தேவையும் தானாகவே எழுந்துள்ளன. இது பிரேமதாசாவின் ஒரு பக்கம்.

தென்னிலங்கைக்குத் தலைமை வகித்த அரசியல் தலைவர்களில் பிரேமதாசா வித்தியாசமானவர். சாதாரண அடிமட்டக் குடும்பத்தில் பிறந்தவர். ஆகையால் ஏழைகளின் கஷ்டங்களை உணர்ந்தவர். அதனால் அவர்களின் வாழ்க்கையை உயர்த்த வேண்டும் என்று மனதார உழைத்தவர்.

தமிழர் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், சிங்களத் தலைவர்களில் அவர் ஒருவரே ஓரளவேனும் உதவக் கூடிய மிதவாதப் போக்குடையவர் என்ற கருத்து தமிழர்களில் ஒரு சாராரிடம் நிலவிற்று. ஆனால் அவரும், பதவி ஆசையினால் உயர்மட்டத் தலைவர்களைப் போலவே, சிங்களப் பேரினவாதத்துக்குப் பயந்து அதற்கு அடிமையாகி இருந்தார். அதனால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியாக எதனையும் செய்யவில்லை.

இவை அவரது அடுத்த பக்கத்தின் அம்சங்கள்.

# மேதினப் பேரணியில் கையசைத்தபடி

# உற்சாகமாக வந்தார் பிரேமா!

## ஆனால் ஆமர் வீதியில் 'சரித்திரம்' முடிந்தது

கொழும்பில் மேதினம். நேற்று முன்தினம் காலை அரசியல் கட்சிகளின் மேதினப் பேரணிகளில் கலந்து கொள்ள மக்கள் திரண்டு வந்தபடி இருக்கின்றனர்.

தங்களது கட்சிகளின் பேரணிகள் நடைபெறவிருக்கும் இடங்களை நோக்கி அவர்கள் உற்சாகத்துடன் கோஷங்களை எழுப்பியபடி வாகனங்களிலும், கால்நடையாகவும் சென்ற வண்ணம் உள்ளனர்.

தலைநகர் கொழும்பில் எங்கும் பச்சை, சிவப்பு, நீல உடைகளுடனும் பதாகைகளுடனும் மக்கள் அலை மோதுகின்றனர். வீதிகளில் கட்சிகளின் பதாகைகளும், சுவரொட்டிகளும் கண்ணைக் கவரும் விதத்தில் காட்சி தருகின்றன.

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கை நோக்கி ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள் படையெடுத்தபடி இருக்கின்றனர்.

### சுகததாசா அரங்கிலிருந்து

சுகததாச விளையாட்டு அரங்கில் இருந்துதான் ஐ.தே.கவின் மேதினப் பேரணி ஆரம்பமாகவுள்ளது. அந்தப் பகுதி விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

நண்பகலுக்கு சற்று முன்னர் அங்கிருந்து ஐ.தே.க. பேரணி வெகு ஆரவாரத்துடன் ஆரம்பமாகி நகர்ந்து முன்னேறி வருகிறது!

ஜனாதிபதி பிரேமதாச சாதாரண வெள்ளை சாரமும் அரைக்கை சேர்ட்டும் அணிந்து வழமையான கம்பீரத்துடன் பேரணியின் முன்னே வருகிறார். தலையில் பச்சை வண்ணத் தொப்பி பிரேமாவின் கம்பீரத்தை மெருகூட்டிக் காட்டுகிறது.

லலித்தின் கொலைச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு பதற்றம் ஏதும் அவர் முகத்தில் பிரதிபலிக்கவில்லை. வழமையை விட உற்சாகமாக இருப்பது போலக் காணப்படுகிறார் பிரேமா. தனக்கு எதுவுமே நடக்காது என்ற அசட்டுத் துணிவும் அவரிடம் இருந்ததோ!

வீதிகளின் இரு மருங்கிலு[ம்] ஐ.தே.க. ஆதரவாளர்கள் திரண்டிருக்கின்றனர். மக்கள் கூட்டத்தைக் கண்ணுற்ற பிரேமா மேலும் உற்சாகமடைகிறார்.

வீதிகளின் இரு மருங்கிலும் இருந்து மக்கள் ஆரவாரம் செய்கின்றனர். பிரேமா ஆனந்தமாக கையசைத்தபடி வந்து கொண்டிருக்கிறார். சில இடங்களில் மெய்ப்பாதுகாவலர்களையும் தவிர்த்துவிட்டு தனித்து மக்கள் கூட்டத்தின் அருகே செல்கிறார். அவர்களிடம் சாதாரணமாக — வெகு சரளமாக — உரையாடு



ஜனாதிபதி பிரேமதாச

கிறார் சில சமயங்களில் நடைபாதைக்குச் சென்றும் கூட அவர் உரையாடுகிறார். மக்களின் சந்தோஷம் எல்லை மீறுகிறது.

### நடந்தும் வாகனத்திலும்

பின்னர் திறந்த வாகனம் ஒன்றில் ஏறி வருவதையும் ரூபவாஹினி ஒளிபரப்புகிறது. திடீரென வாகனத்தில் இருந்து இறங்கி விடுகிறார் பிரேமா. மீண்டும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் அவர் பேரணியின் முன்னே நடந்தவாறு வருகிறார். பேரணி ஆமர் வீதியை அடைகிறது.

பேரணியில் ஜனாதிபதி வந்து கொண்டிருக்கும் வேளையில், முந்திய மேதினப் பேரணிகளைப் போல பிரேமாவின் அருகில் அமைச்சர்கள் எவரும் அதிகமாக காணப்படவில்லை. பாதுகாப்பு அதிகாரிகளே காணப்படுகின்றனர்.

பேரணியில் அமைச்சர்கள் ப்சென்றதை ரூபவாஹினி ஒளிபரப்பிலும் கூட காண முடியவில்லை. சில இடங்களில் பிரேமா அதிகாரிகளுக்கு திடீர் திடீரென உத்தரவுகளைப் பிறப்பிப்பதையும் அவதானிக்க முடிந்தது.

பேரணி ஆமர் வீதிச் சந்தியையும் கடக்கின்றது. இப்பொழுதும் பிரேமா பேரணியின் முன்னால் வருகிறார். நேரம் நண்பகல் 12-30 கடந்து விட்ட வேளை

இன்னும் சில யார் தூரம் முன்னேறுகிறது பேரணி. ஆமர் வீதி பொலீஸ் நிலையத்துக்கு முன்னால்.....

### பயங்கர வேளை......

பகல் 12 45 மணிக்கு அந்தப் பயங்கரம் ஒரு சில கணங்களில் நடந்து முடிந்து விடுகிறது. எங்கிருந்தோ சைக்கிளில் திடீரென வந்த தற்

## பிரேமாவின் கடைசி நிமிடங்கள்...

கொலையாளி குண்டை வெடிக்க வைக்கிறார்.

அங்கு குண்டு பயங்கரமாக வெடிக்கும் சத்தம் நரம்புகளை உறையச் செய்கிறது. அப்பகுதியில் ஒரே புகைமண்டலம். மக்கள் பதற்றத்தில் அங்குமிங்கும் சிதறி ஓடுகின்றனர். எங்கும் ஒரே பரபரப்பு. பெரும் பதற்றம். தமிழ்ப் பகுதி மக்களுக்கு குண்டு, ஷெல் வீச்சினால் ஏற்படும் அனுபவம் அங்கும் தலை காட்டுகிறது.

### அம்புலன்ஸுகள் பறந்தன

ஆமர் வீதியை நோக்கி படையினரின் வாகனங்களும், அம்புலன்ஸுகளும் 'சைரன்ஸ்' ஒலிகளுடன் விரைகின்றன. பொலீஸ் அதிகாரிகளும் கொலைக் களத்தில் பதற்றமுடன் காணப்படுகின்றனர்.

குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் உடல்கள் சிதறிக் கிடக்கின்றன. எங்கும் ஒரே இரத்த வெள்ளம். அந்தப் பகுதி ரணகளமாகக் காட்சி தருகிறது. சிதைந்த சடலங்கள் ஆங்காங்கே வீசப்பட்டுக் கிடக்கின்றன. பொலீஸார் அங்கிருந்து சடலங்களையும், காயப்பட்டவர்களையும் வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

கொலைக்களத்தில் ஓரிடத்தில் இரத்தம் கட்டியாக திரண்டுகாணப்பட்டது. அதை ரூபவாஹினி குறிப்பாக — பெரிதாக்கி(குளோஸ்அப்பில்) காட்டியது அந்த இடத்திலேயே பிரேமதாச உயிரிழந்திருக்க வேண்டும் என்று பலரையும் ஊகிக்க வைத்தது.

### சைக்கிளும், வாகனமும்.

அந்தப் பகுதியில் தற்கொலையாளி கொண்டு வந்ததாகக் கருதப்படும் சைக்கிள் சிதைந்து வெறும் 'றிம்'கள் வளைந்து சுருண்டு கிடந்தன. அங்கே இறந்தவர்களின் உடைகள் இரத்தக் கறைகளுடன் வீசப்பட்டுக் கிடந்தன. வாகனம் ஒன்றும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. ஆனால் அது பிரேமதாசா முன்னர் ஏறி வந்த வாகனம் என்று சொல்வதற்கில்லை.

குண்டுவெடிப்பில் ஜனாதிபதி பிரேமதாசவும் உயிரிழந்து விடுகிறார். அவரது சிதைந்த உடலும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பிரேமா சரித்திரம் ஆமர் வீதிச்சந்தியில் முடிந்து விடுகிறது.

இலங்கையின் அரசியலில் புகழ்மிக்க ஒரு தலைவரின் — சாதாரண, ஏழைச் சிங்கள மக்களின் அபிமானத்துக்குரிய அரசியல் கதாநாயகனின் உயிர் இவ்வுலகை விட்டு பிரிந்து போயிற்று.

கொழும்பு நகரமே கொந்தளிக்கிறது. எங்கும் ஒரே பதற்றம் — பரபரப்பு — பீதி நிலை. இந்தப் பரபரப்பு சில மணித்தியாலங்களில் நாட்டின் எல்லா இடங்களுக்கும் பரவுகிறது.

தெற்கில் அடுத்தடுத்து வந்த பதற்றங்கள் பீதிகளால் சிங்கள மக்களுக்கும் புதிய புதிய அனுபவங்கள்......!

(ஓ)

## தானே உருவாக்கி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் கொல்லப்பட்டது ஒரு சாதாரண விஷயமல்ல. எனவே தற்கொலை, தொழில்நுட்பம் என்ற காரணங்களைக் காட்டி விடுதலைப் புலிகளைக் குற்றஞ் சாட்டுவதில் அர்த்தமில்லை

கேள்வி: பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் உருவாகியுள்ள அரசியல் சூழ்நிலையில் உங்கள் நிலைப்பாடு என்ன?

திலகர்: அரசாங்க மாற்றமோ அல்லது அரசியல் தலைவர்களின் மறைவுகளோ தமிழீழ மக்களைப் பொறுத்த வரையில் பெரிதான மாற்றங்கள் எதனையும் கொண்டு வருவதில்லை என்பதை கடந்த 40 ஆண்டு கால வரலாறு தெரிவிக்கின்றது காரணம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதம் அங்கு நன்கு புரையோடிப்போய் உள்ளது

பிரேமதாசாவின் மரணத்தின் பின்னரும் தமிழீழ மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு அதன் அடிப்படையில் சமாதான, சௌஜன்ய ரீதியில் பிரச்சினைக்கு தீர்வுகாணக்கூடிய அரசியல் தலைமை சிங்கள மக்களிடையே உடனடியாகத் தோன்றும் என்று எதிர்பார்க்கவில்லை.

அடுத்து அரசியல் தலைமையோ, இராணுவத் தலைமையோ சிங்கள தேசத்தின் பொறுப்பை எடுத்த பொழுதிலும் தமிழீழத்தைப் பொறுத்த வரையில் ஏதும் அடிப்படையான மாற்றங்கள் தென்படுமா என்பதைக் கூற முடியாதுள்ளது இந்த நிலைமை வேதனைக்குரிய விஷயமாகும்.

கேள்வி: விடுதலைப் புலிகளின் உத்திகளிலும் கொள்கைகளிலும் ஏதாவது மாற்றம் ஏற்படுமா?

திலகர்: தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் சமாதானத் தீர்வுக்கான முயற்சியைத் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருப்பார்கள்

யார் ஆட்சித் தலைமையை எடுத்தாலும் அவருடன் சமாதானத் தீர்வை கொண்டு வர முடியுமா என்பதை ஆராய்வதும் அதனை நடைமுறைப் படுத்துவதும் விடுதலைப் புலிகளின் முக்கிய தந்திரோபாயச் செயற்பாடாக இருக்கும். அதேவேளை, விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உயிர் பாதுகாப்புக்கும் பொருளாதார வாழ்வுக்கும் தேசிய உரிமைக்குமாக சமமாகத் தொடர்ந்து செயல்படுவார்கள். இவற்றுக்கு குந்தகமாக இலங்கையின் புதிய தலைமை செயற்படாது என்று நம்புகிறேன்.

இவ்வாறு [illegible]

## நேபாளம், பங்களாதேஷிலும் துக்கதினம் அனுஷ்டிப்பு

கொழும்பு, மே. 3

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவு குறித்து பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளும் துக்க தினத்தை அனுஷ்டிக்கவுள்ளன.

பங்களாதேஷில் நேற்று தொடக்கம் மூன்று நாட்களும், நேபாளத்தில் இன்று முதல் இரண்டு நாட்களும்

(6 ஆம் பக்கம் பார்க்க

### திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீது சுமார் 15 நிமிட நேர அதிரடித்தாக்குதலை நடத்தி முகாமை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

அங்கிருந்த 12 இராணுவக் காவலரண்களையும், இராணுவத்தினர் தங்கும் 10 அறைகளையும் விடுதலைப் புலிகள் முற்றாகத் தாக்கி அழித்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் — ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி முகாம் தகர்ப்பின் போது பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களையும், இராணுவ தளபாடங்களையும் படையினரிடம் இருந்து புலிகள் கைப்பற்றினர்.

வெற்றிகரமாக நடத்தப்பட்ட இந்த முகாம் தகர்ப்புத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

★ கப்டன் திலீபன் அல்லது தொல்காப்பியன் (சண்முகராசா சோ — கிளிவெட்டி, மூதூர்)

★ கப்டன் நளன் அல்லது செல்லத்தம்பி (யோகராசா சுபாஸ்கரன் — திரியாய்)

ஆகியோரே அந்த இருவரும் ஆவர். (இ-5)

### மூடிய பெட்டியில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமான், தேவராஜா உட்பட அனைத்து அமைச்சர்களும் நேற்று தமது தலைவருக்கு அஞ்சலியைச் செலுத்தினர்

பௌத்த பிக்கு உட்பட பெரும் எண்ணிக்கையானவர்கள் கதறி அழுததைக் காண முடிந்தது ஊனமுற்ற சிலரும் கூட கியூவில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

திருமதி ஹேமா பிரேமதாசாவும் கண்ணீரும் கம்பலையுமாக அங்கு காணப்பட்டார் வெளிநாட்டில் இருந்து நேற்று தாயகம் திரும்பிய அவரது மகள் துலாஞ்சலி ஜயக்கொடியும் தந்தையின் பேழையின் மேல் விழுந்து கண்ணீர் விட்டார்.

நேற்று மட்டும் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அஞ்சலி செலுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது

நேற்றுக் காலை சுமார் இரண்டு மைல் நீளமான கியூவில் மக்கள் காத்து நின்றதாக செய்திகள் தெரிவித்தன.

தொடர்ந்து நாட்டில் பல பாகங்களிலும் இருந்து மக்கள் கொழும்புக்கு திரண்டு வந்தபடி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-எ-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 பொலிஸார் கைது; 6 பேர் நீக்கம்

மதுராந்தகம் அருகே மாமண்டூரில் வைத்து தடா கைதிகளான மூன்று இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதக்குழு ஒன்றினால் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் ஆணையாளர் ஒருவர், இரண்டு உதவி ஆணையாளர்கள், இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஒன்பது பொலிஸார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜமலர் சத்தியமூர்த்தி

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி இராஜமலர் சத்தியமூர்த்தி (ஆசிரியை, மகாஜனா கல்லூரி) 02-05-1993இல் அகால மரணமானார்.

இவர் அராலி மேற்கைச் சேர்ந்த திரு விஸ்வலிங்கம் சத்தியமூர்த்தியின் (நில அளவையாளர்- கனடா) அன்பு மனைவியும்.

திரு. க. அம்பாப்பிள்ளை-தங்கம் ஆகியோரின் அன்புமகளும், ரூபிணி (வேம்படி மகளிர் கல்லூரி), மிதுலா, சுகன்ஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம் (அக்கவுண்டன்), சிவலிங்கம் (பொறியியலாளர்), தேம்பாமலர் (B. Sc ), புனிதமலர் (டாக்டர்), தவலிங்கம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவருடைய ஈமக்கிரியைகள் 02 05-1993 அன்று அராலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்

தகவல்:

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

சுகன்ஜன் [மகன்]
ரூபிணி [மகள்]

(25497)

வைத்திய கலாநிதி

## இரத்தினசபாபதி பாக்கியநாதன்

(ஜே. பி.)

வைத்திய கலாநிதி இ. பாக்கியநாதன் ஜே பி 02-05-1993 ஆம் திகதி காலை காலமானார்.

இவர் திருநெல்வேலி கிழக்கு காலஞ்சென்ற வைத்திய கலாநிதி பொன்னையா இரத்தினசபாபதி, திருமதி பாக்கியம் இரத்தினசபாபதியின் அன்பு மகனும், திருமதி பா. புஷ்பராணியின் (ஊர்காவற்றுறை நீதிமன்றம்) அன்புக்கணவரும், செல்வன் விசாகன், செல்வன் சுகந்தன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இ. கமலநாதன் (சட்டத்தரணி), திருமதி சிவகுமார் சரோஜினிதேவி (திருமலை), இ. பொன்னையா, திருமதி விஜயராகவன் சசிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கமலநாதன் யாமதி (கொழும்பு), திருமதி பொன்னையா இந்திராணி (ஆசிரியை, செங்குந்தா இந்துக்கல்லூரி), திரு. சி. சிவகுமார் (ஆசிரியர், திருமலை), திரு. வ. விஜயராகவன் (லண்டன்), திரு. து. ஸ்ரீ கிருஷ்ணராஜா (கனடா), திரு. து. ஸ்ரீ காந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. பொன்னையா,
(சகோதரர்)

பொன்னையா வைத்தியசாலை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (25499)

## இளையபிள்ளை நடராசா

இளையபிள்ளை நடராசா காலமானார்.

அன்னார் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது இல. 153/ 2 கஸ்தூரியார் லேனில் வசிப்பவரும், பகவதி என அழைக்கப்படும் நடராசாவின் அன்பு மனைவியும், அழகர் மரகதத்தின் அன்பு மகளும், திருநாவுக்கரசு, செல்வராசா, தனபாலசிங்கம், இரத்தின சிங்கம் (சுவிஸ்), நாகம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், பராசக்தி. ரஞ்சிதமலர், சதானந்தரூபி கனகாம்பிகை (சுவிஸ்), சிவசம்பு கோபால பிள்ளை ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 03-05-93 மு. ப: 10 மணிஅளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
M. பாலன்
(மகன்)

152/ 2 கஸ்தூரியார் லேன்,
யாழ்ப்பாணம்.

(25504)

## செல்வி சிவானந்தி சரவணமுத்து

(தொண்டர் ஆசிரியை, யா / கற்கோவளம் மெ. மி த. க. பாடசாலை)

செல்வி சிவானந்தி சரவணமுத்து 29-04-93 அன்று காலமானார். அன்னார் திரு. வேலாயுதபிள்ளை சரவணமுத்து (பிரதம கணக்காளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு), திருமதி ச. சரஸ்வதி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், திரு. ச. ஞானேசன் (லண்டன் பல்கலைக்கழகம்), திரு. ச. திருநேசன் (இலங்கை வங்கி, திருகோணமலை), செல்வன் ச. சுரேசன், செல்வி ச. பவித்திரா (யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், பிரபல சோதிடர் வே. கருணாந்தராசா அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03-05-1993 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பருத்தித்துறை கோரியடி மயானத்தில் நடைபெறவுள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்:
திருமதி சரவணமுத்து சரஸ்வதி

''சாஸ்திரியார் ஒழுங்கை'',
தும்பளை, பருத்தித்துறை.

# புதிய ஜனாதிபதி மீது ராணுவ அழுத்தம் அதிகமாக இருக்கும்

## பி.பி. ஸியில் ஆய்வுக் கண்ணோட்டம்

கொழும்பு, மே 3

புதிய ஜனாதிபதி மீது இராணுவத்தின் அழுத்தங்கள் அதிகமாகவே இருக்கும். இந்த அழுத்தங்களைச் சமாளிப்பது புதிய ஜனாதிபதிக்கு கடினமான ஒன்றாகவே இருக்கும்.

''பிரேமதாசாவுக்குப் பின்னர் இலங்கை'' என்ற தலைப்பில் பி. பி. ஸி. செய்திப் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தோபர் மொறிஸ் எழுதிய ஆய்வுக் கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரேமதாசாவின் மறைவு நீடித்த ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையை உருவாக்கப் போகிறது.

புதிதாக ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டாலும் நீடித்த காலத்துக்கு இலங்கையில் பதவி அதிகாரப் போட்டி தொடரத்தான் போகிறது.

புதிய அதிகாரம் நிலைபெற, வேரூன்ற சற்றுக் காலம் பிடிக்கும்.

இலங்கை அரசியலில் ஆயுதப் படையினர் இனி எடுக்கப் போகும் நிலை என்ன என்பது தான் கவனிக்க வேண்டிய ஒன்று.

கடந்த 10 ஆண்டுகளில் ஆயுதப்படையின் செல்வாக்கு அதிகரித்துள்ளது ஆயுதப் படையினர் இலங்கை அரசியலில் ஒருபோதும் நேரடியாகத் தலையிடவில்லை. ஆனால் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் ஜனநாயகத்தின் நன்மைகள் தோன்றவில்லை என்று காணப்படும் பட்சத்தில் இராணுவத் தலைமையின் நேரடித் தலையீடு அரசியலில் அதிகரிக்கலாம்.

தமிழர்களின் வாக்குகளைக் கருத்தில் கொண்டு பிரேமதாசா இராணுவத்தின் கைகளைச் சற்றே கட்டிப்போட்டிருந்தார். இதனால் இராணுவ அதிகாரிகள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

பிரேமதாசா கொலைக்கு காரணம் தற்கொலைப்படை என்பதால் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கும் அதை நியாயப்படுத்தவும் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டவே இராணுவம் விரும்பும்.

இப்படி அந்த கண்ணோட்டத்தில தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

## ஜனாதிபதி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் நடைபெற்றன. ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டுக் கூட்டத்திற்கு கட்சியின் தவிசாளர் டாக்டர் எம். சி எம் கலீல் தலைமை வகித்தார்.

நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதி பதவிக்கு திரு. விஜேதுங்காவின் பெயரை பதில் பிரதமர் சிறிசேன கூரே முன்மொழிய, அமைச்சர் சாகுல் ஹமீது வழிமொழிந்தார்.

### பணிவுடன் ஏற்பதாக அறிவிப்பு

நெருக்கடியான இந்தத் தருணத்தில் புதியபொறுப்பை பணிவுடன் தாம் ஏற்றுக் கொள்வதாக திரு. விஜேதுங்கா தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளைத் தாம் தொடர்ந்தும் கடைப் பிடிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுக் காலையில்—

ஜனாதிபதி பதவிக்கு வர விரும்புபவர்கள் ஆளும் கட்சிக்குள்ளே ஆதரவு திரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு தமது ஆதரவாளர்களைத் திரட்டியதாக ஏஜன்சிச் செய்திகள் கூறின

எனினும் கூட்டுக் கூட்டத்தில் திரு. விஜேதுங்காவையே ஜனாதிபதி பதவிக்கு நிறுத்த ஏகமனதாக முடிவாகியது

### ஜே. ஆர். அவசரமாக திரும்பினார்

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா புதுடில்லியில் இருந்து நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்ததைத் தொடர்ந்தே ஏகமனதான முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது.

ஆளும் கட்சி தனது அடுத்த தலைவரைத் தெரிவு செய்வதற்கு உதவுமுகமாக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று புதுடில்லியில் இருந்து அவசரமாக கொழும்பு திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## நேபாளம்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நேபாளத்தில் அரச கட்டடங்களில் அந்நாட்டின் தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. அங்கு இன்று திங்கள் ஒருநாள் விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் மூன்று நாட்களுக்கு துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று நாடுகளும் சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தெற்கில் ஆரவாரமும் அச்சமும்

கொழும்பு, மே 3

பிரேமதாசாவின் மரணத்தை அடுத்து எதிர்க்கட்சித் தொண்டர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டு வருவதால் அவர்களுக்கும் ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்படலாம் என்றும—

பிற சமூகத்தினர் மீது கூட தாக்குதல் நடத்தும் அச்சம் நிலவுவதாகவும் தமது செய்தியாளர் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (ஒ-எ)

## ஒஸியும் அஞ்சலி

கொழும்பு, மே 3

பிரேமாவின் பூதவுடலுக்கு நேற்று ஒஸி அபேகுணசேகராவும் அஞ்சலி செலுத்தினார்.

குண்டுத் தாக்குதலில் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் ஒஸியும் கொல்லப்பட்டு விட்டதாக நேற்று முன்தினம் இரவு சிங்கள பி பி ஸி செய்தியில் தெரிவிக்கப்பட்டு—

அன்றைய அதே செய்தியில் பின்னர் மறுப்பும் தெரிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ 6)

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, மே 3

பிரேமதாசாவின் கொலையை எதிர்க்கட்சிகள் வன்மையாகக் கண்டித்தன. இத்தகைய வன்செயல்கள் தொடர்ந்தால் நாட்டில் மிகப் பயங்கர நிலைமை தோன்றும் என்று அவை எச்சரித்துள்ளன

இந்த அனுதாபச் செய்தியில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டுள்ளனர்.

## கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மே 2

திருகோணமலை மாவட்டம் பம்புறுக்க வெவ முகாம் தகர்ப்பின் போது படையினரிடம் இருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:—

- ஏ. கே. எல். எம். ஜி — 01
- அதற்குரிய மகஸீன் — 04
- ரி 81 துப்பாக்கி — 01
- அதற்குரிய மகஸீன் — 07
- ரி 56 துப்பாக்கி — 03
- அவற்றுக்குரிய மகஸீன் — 12
- நடுத்தர ரவைகள் — 4,824
- எம் 72 ரக கிரனேட் — 02
- ஜே. ஆர். கிரனேட் — 01
- தலைக் கவசம் — 07
- சப்பாத்து — 30 சோடி
- இராணுவப் பை — 20
- தண்ணீர் கான் — 08
- இராணுவத் தொப்பி — 13
- இடுப்பு பட்டி — 16
- மகஸீன் ஹோல்ஸர் — 10
- ஏ. கே. மகஸீன் ஹோல்ஸர் — 08
- தண்ணீர் கான் தாங்கி — 27

(இ-5)

# புலிகள் இயக்கத்துக்கு தொடர்ந்து ஆதரவு

## ராமதாஸ் கட்சி அறிவிப்பு

சென்னை, மே 3

தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர்களது தமிழீழப் போராட்டத்தையும் பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து ஆதரிக்கும்.

கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கிடையில் எதிர்வரும் பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அ. தி. மு. க, தி. மு. க. மற்றும் இந்திரா காங்கிரஸ் கட்சிகளில் எதனையும் ஆதரிப்பது இல்லை என பாட்டாளி மக்கள் கட்சி முடிவு செய்துள்ளது.

கன்னியாகுமரியில் நடந்த கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

பழனி, ராணிப்பேட்டை இடைத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிக்கப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சி முன்னர் அறிவித்திருந்ததும்—

தேர்தல் கமிஷனின் உத்தரவை அடுத்து ராணிப்பேட்டை இடைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதும் தெரிந்தவையே. (இ-எ)

## தற்கொலைப் படை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் —

கொழும்பு பொலீஸ் அதிகாரி ஒருவர் தற்கொலைப்படை நபரின் சிதறுண்ட தலையை பரிசீலனை செய்யும் புகைப்படம் ஒன்றை ''த இண்டிப் பெண்டன்ற்'' என்ற லண்டன் நாளிதழ் நேற்று வெளியிட்டது.

இது இவ்வாறிருக்க, பிரேமதாஸாவின் கொலை விடுதலைப் புலிகளின் வேலையே என்று பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-எ-5-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org